LIBRARY
29 JUN 20
Eastern University, Sri Lanka.

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## முதலாம் வருட பொதுக்கலைமாணித் தேர்வு - 2007/2008 (வெளிவாரி)
## (மே 2011)

## TL 101 தமிழ் இலக்கிய வரலாற்றின் அறிமுகமும் குறிப்பிட்ட பாடநூல்களும்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் இரு வினாக்களுக்குக் குறையாமல் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

### பகுதி – I

01. சங்ககால இலக்கியங்கள் பற்றி, அண்மைக்காலத்தில் நடைபெற்ற ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ள புதிய செய்திகள் யாவை? தெளிவுபடுத்துக.

02. சோழர்காலம் காவிய காலம் என்று கூறுவது எவ்வளவுதூரம் பொருத்தமுடையது? ஆராய்க.

03. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழில் உரைநடை வளர்ந்தமைக்கான காரணங்களைச் சுருக்கமாகக் குறிப்பிட்டு, அவ்வுரைநடை வளர்ச்சியில் வீரமாமுனிவர் **அல்லது** ஆறுமுகநாவலர் ஏற்படுத்திய மாற்றங்கள் யாவை என விளக்குக.

04. நவீன தமிழ்க்கவிதை வளர்ச்சியில் பாரதிதாசன் பெறும் முக்கியத்துவம் குறித்துப் பரிசீலிக்குக.

### பகுதி – II

05. பாத்திரங்களின் மன உணர்வுகளை வெளிப்படுத்த சங்ககாலப் புலவர்கள் கையாண்ட உத்திகள் யாவை? நீர் படித்த குறுந்தொகைச் செய்யுள் பகுதியை அடிப்படையாகக் கொண்டு விளக்கம் தருக.

06. 'வழக்குரைகாதை' சிலப்பதிகாரத்தில் பெறுகின்ற முக்கியத்துவம் குறித்து ஆராய்க.

07. கும்பகர்ணனது குணவியல்புகள் கம்பரால் சித்திரிக்கப்படுமாற்றினை உதாரணங்களுடன் எடுத்துக்காட்டுக.

08. நீலாவணனின் கவிதையாக்க முறைமையில் வெளிப்படும் சிறப்புக்களை 'வழி' தொகுப்பை உதாரணமாகக் கொண்டு விளக்குக.